# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,882 — 1931 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 18 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஹாளியெலையில் ஒரு பகிரங்க கக்கூஸ் போடுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

கடைசிப்படத்து இல. 97 அட்டவணை இல. 5. குறிச்சி—மெதபித்தை, வோகடை கோறளை, யற்றிக்கிந்தை டிவிசன்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். வ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 18G | கன்னிஹேல .. | வெறும்பூமி .. | ஹாளியெலை சனேரிஸ் அப்புகாமி .. | 0 0 11 |
| 18H | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 0·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம நான் இதனைகொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஸ்ரீ ஐப்பசி மாசம் 30 ந் தேதியிலன்று சாயந்தரம் 2 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1931 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 11 ந் உ.

ஈ. ரீ. மிலிங்டன்,
ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிரசித்த மலசலம்களிக்கும் கட்டிடத்திற்கும் அதற்குப் போகிற வழிக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 3,038. குறிச்சி—இரத்தினபுரி நகரசங்க எல்லைகளுள்.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். வ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | டெத்தரபிட்டியவத்தை .. | தென்னந்தோட்டம் .. | ஏ. எல். எம் முஸ்தபா கச்சியாரின் ஆஸ்திக்கு உரித்தாளிகள் | 0 0 9·2 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஸ்ரீ ஐப்பசி மாதம் 10 ந் தேதியிலன்று முற்பகல் 10.30 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1931 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 9 ந் உ.

சீ. எச். கொலின்ஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இட்டமல்கொட பள்ளிக்கூடம் கட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 4,165. குறிச்சி—இட்டமல்கொட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கோஸ்கோல்வத்த | .. தோட்டம் | .. கே. பீ. ஏ. ஜோன்சின்ஞேவும் மறுபேரும் | .. 0 0 33·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின்பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஹு ஐப்பசிமாசம் 12 ந் தேதியிலன்று 10.30 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1931 ம் ஹு புரட்டாதிமீ 15 ந் உ.

சீ. எச். கொலின்ஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்கள்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் மேற்குப் பிரிவின், கிறிமினெல் வழக்கு விசாரணை, 1931 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
கார்ள். ஈ. ஆண்ட்,
மேல்மாகாண பிஸ்காலுக்காக.

கொழும்பு பிஸ்கால் கந்தோர்,
1931 ம் ஹு செப்டம்பர்மீ 10 ந் உ.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் இரத்தினபுரி டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1931 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
சீ. எச். கொலின்ஸ்,
பிஸ்கால்.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1931 ம் ஹு செப்டம்பர்மீ 6 ந் உ.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

கொழும்பு டிஸ்திறிக் சியஞகோறளே கங்கபொடபத்துவே ரதாவானையில் இருக்கும் உடகம விஜயதுங்க ஆராச்சிகே பேதிரிக் பியரத்ன ஆகிய நான் இலங்கை அரசாட்சியின் 1907 ம் ஹு 1 ம் இலக்கச் சட்டத்தின் செடியூல் 1 B ன் 2 ம் பிரமாணத்தின்படி இன்று துவக்கம் 3 மாசத்துககுப்பின் கொழும்பு டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்வாக வேலைபார்க்கிறதற்கு றிஜிஸ்ருர் ஜெனரல் அவர்களுக்கு மனுச்செய்வேனென்று இத்தால் விளம்பரப்படுத்துகிறேன்.

இப்படிக்கு
யூ. டப்ளியூ. பீ. பியரத்ன.

1931 ம் ஹு செப்ரெம்பர்மீ 2 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.